**தேயிலை சக்தி நிதியம் - 2016**

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

தேயிலை சக்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதிய அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதி அதன் இழிவு பெறுமதியில் பொருண்மையானதாக மாறுபடும் இடத்து அல்லது ஒவ்வொரு 03 வருடங்கள் அல்லது 05 வருடங்களில் அந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நிதியத்தின் நிலையான சொத்துக்கள் 2006 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேயிலை சக்தி நிதியம் 2008 முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஆண்டுகளுக்காக தொடர்ச்சியாக நட்ட நிலைமையில் பேணிச்செல்ல வேண்டி ஏற்பட்டதன் அடிப்படையில் நிறுவனத்தில் காணப்பட்ட தொழிற்படு மூலதன பிரச்சினைகளினால் கணக்கீட்டு சம்பந்தத்தின் பிரகாரம் கணக்குகளை மீள் மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்த போதும் தற்போதுள்ள பணிகள் அரசாங்கத்தின் விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சில தொழிற்சாலைகளில் மதிப்பீட்டு அறிக்கை தற்போது நிறுவனத்திற்கு கிடைத்துள்ளது. | மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 68 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் விடயங்களில் விற்பனையில் இருந்து அகற்றும் போது ஏற்படுகின்ற நலன்கள் அல்லது பாதகமான நிலைமைகள் அல்லது நிதிக்கூற்றுக்களின் இலாபம் அல்லது நட்டம் சீராக்கப்படல் வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் போது நிதியத்திற்குச் சொந்தமான இழிவுப் பெறுமதி பூச்சியம் ஆன 04 வாகனங்கள் ரூபா 6,761,400 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அந்த விற்பனையில் இருந்து கிடைத்த இலாபம் மேற்கூறப்பட்ட பிரகாரம் சீராக்கப்படாமல் நிதி நிலைமை கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த 04 வாகனங்களை உள்ளடக்கிய 05 வாகனங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானதேய்வு பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டிலும், நிதிக்கூற்றுக்களுக்கான பட்டோலைகளில் இருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சரிசெய்தல்கள் 2017 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கை மூலம் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் விடயங்கள் விற்பனையில் இருந்து அகற்றும் போது ஏற்படுகின்ற நலன்கள் அல்லது பாதகங்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சீராக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்திற்குச் சொந்தம் அல்லாத 37 வாகனங்கள் நிதியத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டிலும், நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2005 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் | தேயிலை சக்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கம் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களை கட்டியெழுப்புவதாக இருந்ததுடன் அந்த | நிதியத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் மாத்திரம் நிலையான சொத்துப் பதிவேட்டிலும் நிதிக்கூற்றுக்களிலும் |

| | | | |
| --- | --- | --- | --- |
| | ஆண்டு வரை பெறுமானத் தேய்வு ஒதுக்கப்பட்டிருந்தது. அதனால் 17 வாகனங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி 20 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 95,250 ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் ஆண்டின் நட்டம் ரூபா 95,250 இனால் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களில் வரவு மீதி ரூபா 20,346,301 இனாலும் மிகை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | தேயிலை தோட்டத்தில் சிறு தேயிலைத் தோட்ட சங்கங்களில் இருந்து தேயிலை கொழுந்துகளை சேகரித்து தேயிலை சக்தி தொழிற்சாலைகளுக்கு கொழுந்துகளை வழங்குவதற்காகவும் மற்றும் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கங்களை வலுவூட்டுவதற்காகவும் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கங்கள் குத்தகை வசதியின் அடிப்படையில் இந்த வாகனங்களை கொள்வனவு செய்திருந்தது. | உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஆ) | தேயிலை சக்தி நிதியத்தின் பிரதான அலுவலகம் நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான பத்தரமுல்ல பெலவத்தையில் அமைந்துள்ள காணியொன்றை கொள்வனவு செய்வதற்கு 2010 மார்ச் 31 ஆம் திகதி ரூபா 8,082,256 முற்பண தொகை அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த காணியின் முழுமையான பெறுமதி செலுத்தாமையின் காரணமாக அதிகார சபையால் 2016 யூலை 07 ஆந் திகதி ரூபா 7,000,000 தேயிலை சக்தி நிதியத்திற்கு மீள செலுத்தியிருந்தது. எனினும் முற்பண தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீண்டும் கிடைத்த ரூபா 7,000,000 தொகை தொங்கல் கணக்கில் செலுத்தப்பட்ட ரூபா 8,082,256 பெற வேண்டிய முற்பணமாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதியத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 7,000,000 இனால் மிகை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | உரிய சரிசெய்தல்கள் 2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கைகள் மூலம் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | முற்பணத்தை தீர்த்தல் சரியாக கணக்குகளில் வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பஸ்ஸர தொழிற்சாலை செலவினங்களை தீர்ப்பதற்காக பெறப்பட்ட ரூபா 2,000,000 வங்கி மேலதிகப் பற்று நிதிக்கூற்றுக்களில் சரியாக வகைப்படுத்தப்படாமல் நடைமுறைப் பொறுப்பின் கீழ் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் உள்ளடக்கி தொங்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | உரிய சரிசெய்தல்கள் 2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கைகள் மூலம் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியாக வகைப்படுத்தலின் கீழ் சமர்பித்தல் வேண்டும். |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டில் 06 மாதங்களுக்குரிய காப்புறுதி தவணைப் பெறுமதியான ரூபா 5,993,437 தொகை 2016 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் இறுதியிலும் ஏனைய பெற வேண்டியவைகளில் காண்பிக்கப்பட்டமையால் நிதியத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அப் பெறுமானத்தால் மீள் மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | உரிய சரிசெய்தல்கள் 2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கைகள் மூலம் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டில் முன்கொண்டு வரப்படுகின்ற கொடுப்பனவுகளை கவனத்தில் கொள்ள வேண்டும். |
| (உ) | தேயிலை சக்தி நிதியத்தின் யட்டிநுவர பொத்துப்பிட்டிய மற்றும் புலத்கொகுப்பிட்டி தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 2001 ஆம் ஆண்டின் போது ரூபா 28,311,751 முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் முற்பணம் வழங்கி 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு அல்லது போதியளவான நிதியேற்பாட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வைப்புக்கள் மற்றும் முற்பணமாக முன்கொண்டு வரப்படுகின்றது. | அவதானிப்புடன் இணங்குகின்றோம். | தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கு முற்பணம் வழங்கி 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தமையால் முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கோ அல்லது போதியளவான நிதியேற்பாட்டை வழங்குவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் 04 தொழிற்சாலைகளின் பற்றாக்குறை தேயிலையின் பெறுமதி ரூபா 7,902,517 ஆக நிதிநிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த பற்றாக்குறை சொத்திற்காக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரை நியமித்து நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது இருந்ததுடன் இலாப நட்ட கணக்கில் நட்டமாக இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விலகிச் சென்றமை சில உத்தியோகத்தர்கள் மரணமடைந்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் உரிய பெறுமதி அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இன் 2.2.3 இன் பிரகாரம் இழப்பு தொடர்பாக முழுமையான விபரங்கள் பொது திறைசேரிக்கு அறிக்கையிடப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | வேறுபாடு (ரூபா) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| விழா முற்பணம் மற்றும் ஏனைய முற்பணம் (07 வருடங்களை விட மேல்) | 903,912 | 264,733 | 639,179 | 2017 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கை மூலம் உரிய சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொழிற்சாலைக் கணக்குகளை நாளதுவரையாக்கி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 92,703,191 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை | 2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கைகளுடன் விரிவான பட்டோலை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| பூர்த்தி தேயிலை மற்றும் உர இருப்பு | 4,387,922 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை | 2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கைகளுடன் விரிவான பட்டோலை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் இறுதியில் இருப்பு மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |
| வியாபரம் மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் | 271,543,470 | மீதி உறுதிப்படுத்தல், விரிவான பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு | 2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கைகளுடன் விரிவான பட்டோலை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| வியாபரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் | 318,946,968 | மீதி உறுதிப்படுத்தல், விரிவான பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு | 2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கைகளுடன் விரிவான பட்டோலை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சகல செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேயிலை சக்தி நிதியம் முன்னின்று சிறிய தேயிலைத் தோட்ட சங்கங்களுக்கு குத்தகை முறையில் வழங்கப்பட்டிருந்த 13 வாகனங்களுக்காக குத்தகை தவணைப் பணமாக 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 2,691,326 தொகை தேயிலை சக்தி நிதியத்தால் செலுத்தப் பட்டிருந்ததுடன் அது | நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை கட்டியெழுப்புவதாக இருந்ததுடன் அந்த நோக்கத்தில் சிறு தேயிலைத் தோட்ட சங்கங்களுக்கு தேயிலை கொழுந்து சேகரித்து தேயிலை சக்தி தொழிற்சாலைகளுக்கு கொழுந்துகளை | சிறு தேயிலைத் தோட்ட சங்கங்களுக்காக செலுத்தப்பட்ட குத்தகை தவணைப் பணம், நிதியத்திற்கு மீள அறவிடுவதற்கு முடியாதிருக்குமாயின் அந்த மீதிகளுக்காக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற வேண்டிய மீதியொன்றாக நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த மீதியை அறவிடுவதற்கு நிதியத்திற்கு முடியாதிருந்தது. இந்த பெறுவனவுகள் நிச்சயமற்றதாக காணப்பட்ட போதும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நிதியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குவதற்காகவும் மற்றும் சிறி தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கங்களை வலுப்படுத்துவதற்காகவும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கம் குத்தகை வசதியின் கீழ் கொள்வனவு செய்த வாகனங்களுக்காக உரிய குத்தகை தவணைப் பணம் தேயிலை சக்தி நிதியத்தின் மூலம் 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளின் போது செலவிடப்பட்டிருந்தது. அந்த குத்தகை தவணைப் பணத்தை மீண்டும் அறவிடும் நோக்கில் அவ்வாறு மேற்கொண்டிருந்ததுடன் பின்னர் அந்த சங்கங்களின் மூலம் தேயிலை சக்தி தொழிற்சாலைகளுக்காக கொழுந்துகளை வழங்குதல் வீழ்ச்சியடைந்ததன் அடிப்படையில் இந்த பணத்தை அறவிடுவதற்கு தேயிலை சக்தி நிதியத்திற்கு முடியாதிருந்தது. அதன் மூலம் உரிய மீதி கணக்கு அறிக்கைகளில் 2002 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்றது. எதிர்காலத்தில் இந்த சொத்துக்களை மீண்டும் அறவிடுவதற்கு இயலுமை காணப்படாதிருக்குமாயின் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ரூபா 1,548,354 நிதி ரீதியான நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 08 வருட காலத்தில் இருந்து வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளாக நடைமுறைச் சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் மரணமடைந்ததன் அடிப்படையில் உரிய நிதி ரீதியான நட்டத்தை அறவிடுவதற்கு முடியாதுள்ளது. | இந்த நிதி ரீதியான நட்டம் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 ஆம் ஆண்டு முதல் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 2,957,414 நானாவித கடன்கொடுத்தோர் மீதி காணப்பட்ட போதும் அந்த கடன் கொடுத்தோரை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | கடன்கொடுத்தோரை இனங்கண்டு அந்த மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 396 | விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் செல்லுபடிக்காலம் அதாவது 06 மாதங்களை விஞ்சிய காசோலைகளை செல்லுபடியாக்கி மீண்டும் பெறுநருக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 08 மாதங்கள் முதல் 26 மாதங்கள் வரை காலாவதியான வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 213,500 பெறுமதியான 11 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சரிசெய்தல்கள் 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காலாவதியான வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ 12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 2022 செப்டெம்பர் 06 ஆந் திகதி | எதிர்காலத்தில் உரிய சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களுடன் ஆண்டின் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 18 ஆந் திகதி வரையிலும் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) | 2015 ஒக்டோபர் 23 ஆந் திகதிய திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 3/2015 சுற்றறிக்கை 02 ஆம் பந்தி | செயற்பாடற்ற உத்தியோகபூர்வ வங்கி கணக்குகளை மூடும் போது சுற்றிக்கையின் மாதிரிப் படிவ இலக்கம் TOD/BA/03 சரியாக பூர்த்தி செய்து திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்ட 03 வங்கி கணக்குகளை முடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் நிதியத்தால் குறித்துரைத்த மாதிரிப் படிவம் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேயிலை சக்தி நிதியத்தின் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது தேயிலை சக்தி நிதியத்தின் பங்குகள் விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்காக தேயிலை சக்தி ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டம் மற்றும் முகாமைத்துவ தொழிற்சாலை செயற்திட்டத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட 03 நடைமுறைக் கணக்குகளுக்குரிய செயற்திட்டம் 2002 ஆம் ஆண்டில் முடிவடைந்தமை மற்றும் செயலிழந்ததன் அடிப்படையில் உரிய கணக்குகளில் கொடுக்கல் வாங்கல்கள் அந்த ஆண்டுகளில் இருந்து மேற்கொள்ளப்பட வில்லை. அதன் பிரகாரம் 2019.06.14 ஆம் திகதி உரிய நடைமுறைக் கணக்குகள் மூடப்பட்டுள்ளது. | மூடப்பட்டுள்ள கணக்குகள் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த மாதிரிப் படிவம் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 30,529,438 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 39,232,291 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,702,853 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ஏனைய வருமானம் ரூபா 108,496,158 இனால் அதிகரித்தமை, வட்டிச் செலவினம், விற்பனை மற்றும் விநியோக செலவினம் முறையே ரூபா 18,124,409 இனாலும், ரூபா 14,928,507 இனாலும் குறைவடைந்தமை மற்றும் வட்டி வருமானம் ரூபா 193,599 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

**2.2 விகிதாசார பகுப்பாய்வு**

மீளாய்வாண்டில் நடைமுறைச் சொத்து விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் 1:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அந்த விகிதம் முறையே 1:1.06 மற்றும் 1:0.85 ஆக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இருப்பு மீதி 94 சதவீதத்தால் குறைவடைந்தமை விகிதத்தின் வேறுபாட்டிற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் தேயிலை சக்தி நிதியத்தினால் மின்சார இணைப்பை மீண்டும் பெற்றுக் கொள்ளும் கட்டணம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக மிகை கட்டணம் மற்றும் ஊழியர் வழக்குகளுக்காக தண்டப் பணமாக முறையே ரூபா 154,392 தொகை, ரூபா 109,342 மற்றும் ரூபா 80,500 ஆக கூட்டு மொத்தமாக ரூபா 344,234 சிக்கனமற்றதாக செலவிடப்பட்டிருந்தது. | தேயிலை சக்தி நிதியத்தில் காணப்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக உரிய கொடுப்பனவுகள் தாமதமடைந்ததன் அடிப்படையில் மிகை கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன், தேயிலை சக்தி தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டதன் காரணமாக தொழிலாளர்களுக்கு சேவையினை வழங்குவதற்கு முடியாதிருந்தமையால் அந்த தொழிலாளர்கள் மேற்கொண்ட முறைப்பாடுகளுக்காக உரிய இழப்பீட்டு பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | நிதியத்தின் செலவினங்களை தாமதிக்காமல் குறித்துரைத்த பிரகாரம் குறித்த திகதியில் செலுத்துவதன் மூலம் சிக்கனமற்ற கொடுப்பனவுகளை தவிர்த்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஹொரண உர களஞ்சியம் மற்றும் எல்பிட்டிய, ஹினிதும, ரைகம போரளை மற்றும் பஸ்ஸர தேயிலை தொழிற்சாலை கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக நிதியத்தால் ரூபா 81,036,209 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்து நிதியத்திற்கு சொந்தமாக காணப்படவில்லை. | உரிய காணிகளை தேயிலை சக்தி நிதியத்திற்கு கையளிப்பதற்காக காணி உரித்து உடைய நிறுவனங்களில் எழுத்து மூல இணக்கப்பட்டின் அடிப்பைடயில் தேயிலை சக்தி நிதி ஏற்பாட்டின் மூலம் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய கட்டிடத்தை நிர்மாணித்தல் கிரயம் நிலையான சொத்தின் கீழ் | காணிகளை உரித்தை கையேற்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்டுவரப்பட்டுள்ளது. காணி கையளிப்பதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2016 யூலை 13 ஆம் திகதி இலக்கம் அமப/16/1224/726/015-1 என்ற நலன்புரி நிதியத்தின் நடவடிக்கைகள் அமைச்சரவை தீர்மானம் மற்றும் அதற்கு அமுல்படுத்தல் மாத்திரம் சிறு தேயிலை தோட்டத்திற்கு உரியதாக அமைச்சரவை தீர்மானம் மற்றும் அதற்குரிய நிதி அமைச்சரின் அவதானிப்புக்கள் இலக்கம் 04 இன் பிரகாரம் பங்கு உரிமையாளர்களுக்கு நலன்களை வழங்குதல் மற்றும் நலன்புரி காப்புறுதி நிதியத்தில் இருந்து தொழிற்சாலை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட ரூபா 135 மில்லியன் மீள்கட்டமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் தொழிற்சாலைகளை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்கின்ற வருமானத்தில் ஒரு பகுதி நிதியத்திற்கு வழங்க வேண்டி இருந்த போதிலும், நலன்புரி நிதியத்திற்கு அந்த பணம் செலவு வைத்தல் வரை இது வரை மேற்கொள்ளப்படவில்லை. | தேயிலை சக்தி நிதியத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட நலன்புரி நிதியத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் மாத்திரம் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு கைளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக தேவையான நிதி ஏற்பாடு மாத்திரம் தேயிலை சக்தி நிதியத்தின் மூலம் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டதுடன், நலன்புரி நிதியத்திற்காக சேகரிக்கப்பட்ட தொகை அந்த அதிகார சபைக்கு கையளிப்பதற்கு தேயிலை சக்தி நிதிய மீள் கட்டமைக்கின்ற சந்தர்ப்பத்தின் போது அமைச்சரவை தீர்மானம் கிடைத்திருக்ககவில்லை. தேயிலை சக்தி நிதியத்தின் மூலம் பயன்படுத்தப்பட்ட அந்த ரூபா 135 மில்லியன் தொகை வாடகை மற்றும் முகாமைத்துவ வருமானத்தில் சேகரித்து வைப்பதற்கு மாத்திரம் அமைச்சரவை தீர்மானம் கிடைத்திருந்தது. | கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதியத்தின் பிரதான அலுவலகம் மற்றும் சகல தொழிற்சாலைகளையும் ஒன்றிணைத்து கணக்குகளை தயாரிப்பதற்காக பெறுமதி ரூபா 2,435,000 ஆன கணனி மென்பொருள் முறைமையொன்று 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆம் திகதி | உரிய கணனி தரவு முறைகள் இணையதளம் ஊடாக (Online) அமுல்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், சில தொழிற்சாலைகள் அமைவிடத்தின் பிரகாரம் வலையமைப்பை மேற்கொள்வதற்கு முடியாமையின் காரணமாக பயன்படுத்துவதற்கு | கணனி மொன்பொருள் முறைமையினை கொள்வனவு செய்வதற்கு முன் தேவையான வசதிகள் வழங்க வேண்டியிருந்ததுடன், கொள்வனவு செய்யப்பட்ட முறைமையில் |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் கணக்குகள் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக அந்த மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | முடியாதிருந்தது. | இருந்து ஆகக் கூடிய பயன்பாட்டை பெறுவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிதியத்தை மீள் கட்டமைப்பதன் கீழ் வழங்கப்பட்ட 2016 யூலை 13 ஆம் திகதிய இலக்கம் அமப/16/1224/726/015-1 என்ற அமைச்சரவை தீர்மானத்திற்காக நிதி அமைச்சரின் அவதானிப்புக்களில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் தலைமை அலுவலகத்தில் நிரந்தர பதவி அணியினர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டின் அடிப்டையில் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற வேறு நிறுவனங்களில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காக நியமித்தல் மற்றும் வெற்றிடங்கள் காணப்படாதிருக்குமாயின் மிகை ஊழியர் அடிப்படையில் அவர்களுக்கு விஷேடமாக அந்த நிறுவனத்திற்காக நியமிக்க வேண்டியிருந்த போதிலும், 06 அரச நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த தேயிலை சக்தி நிதியத்தின் 17 ஊழியர்களுக்காக சம்பளமாக ரூபா 6,936,224 தொகை அமைச்சரவை தீர்மானத்தின் பின்னரும் நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கூறப்பட்ட நிறுவனங்களில் நியமிக்கப்பட்டு சேவையாற்றுகின்ற தேயிலை சக்தி நிதியத்தின் சம்பளத்தை பெறுகின்ற உத்தியோகத்தர்கள் அந்த நிறுவனங்களின் பதவி அணியினரில் உள்ளடக்கி அந்த நிறுவனங்களில் இருந்து சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது 05 உத்தியோகத்தர்கள் மாத்திரம் தேயிலை சக்தி நிதியத்தில் இருந்து சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | தேயிலை சக்தி நிதியத்திற்கு எதிராக ஊழியர்கள் மற்றும் வெளித்தரப்பினரால் தொழில் நியாய சபையில் 142 வழக்குகளும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் தொடரப்பட்டுள்ளதுடன் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிதியத்திற்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பான காரண விடயங்களை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| தேயிலை சக்தி நிதியத்தால் மாவட்ட நீதிமன்றங்களில் 14 வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. | | வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 யூலை 13 ஆம் திகதிய இலக்கம் அமப/16/1224/726/015-I மற்றும் 2016 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய இலக்கம் அமப/16/1427/726/015-II என்ற அமைச்சரவை தீர்மானங்களின் மூலம் தேயிலை சக்தி நிதியத்தின் செயற்பாடுகள் பொருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு கையளித்து நிதியத்தினை மீள் கட்டமைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தெனியாய, கிளிமலே, ரைகம கோரலை மற்றும் தெரனியகல என்ற தேயிலை தொழிற்சாலைகள் வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கைகளில் 07 ஆவது பிரிவின் குறிப்பிடப்பட்ட பிரிவின் பிரகாரம் ஆதனங்கள் வாடகைக்கு வழங்கப்பட்ட தரப்பினரால் மாதாந்தம் பச்சை துளிர்களின் இயலளவிற்கு சமமான பெறுமதி தேயிலை சக்தி நிதியத்தின் பெயரில் வங்கி பிணை அல்லது காப்புறுதி மேவுகை பெற வேண்டியிருந்த போதிலும், நிதியம் அதன் பிரகாரம் வாடகையாளரிடம் இருந்து குத்தகையாளரிடம் இருந்து வங்கி பிணை முறி அல்லது காப்புறுமதி மேவுகை பெற்றிருக்கவில்லை. | மாதாந்தம் தேயிலை கொழுந்து விலைகளில் காணப்படுகின்ற தளம்பல்களின் அடிப்படையில் உரிய நிதியத்தை தீர்மானிப்பதற்கு வசதியீனமாக இருந்தமை மற்றும் தொழிற்சாலைகளின் வாடகை மற்றும் முகாமைத்துவம் வெளித்தரப்பினருக்கு கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது தேயிலை சக்தி நிதியத்தால் அந்த தொழிற்சாலைகளின் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்ததுடன், கணிசமான காலம் எடுத்திருந்தமையால் அந்த தொழிற்சாலைகளில் புதிய உற்பத்தியை ஆரம்பிப்பதற்காக வாடகை மற்றும் முகாமையாளர்களுக்கு கணிசமான தொகை முதலீடு செய்வதற்கு ஏற்பட்டமை போன்ற நடைமுறை ரீதியான பிரச்சினைகளின் அடிப்படையில் இந்த நிபந்தனைகளை அமுல்படுத்துவதற்கு வசதியீனமாக இருந்தது. | நடைமுறை நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தி உடன்படிக்கை தயாரிக்க வேண்டியிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கையின் இரண்டாவது பந்தியின் பிரகாரம் ரைகம் கோரளை தேயிலை சக்தி தொழிற்சாலை வாடகையாளர் வாடகை தரப்பினரான திக்ஹேன சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கத்திற்கு மீண்டும் செலுத்தப்பட்ட வைப்பு பணமாக 06 மாதங்களுக்கான வாடகையான ரூபா 1,500,000 தொகை தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிட வேண்டியிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டின் போது வாடகை உடன்படிக்கை இறுதி வரையிலும் நிதியத்தால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திக்ஹேன சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கத்தின் உடன்படிக்கை காலம் முடிவடைவதற்கு முன் தொழிற்சாலை மீண்டும் தேயிலை சக்தி நிதியத்திற்கு கையேற்று மீண்டும் புதிய முகாமைத்துவ முகாமையாளருக்கு தற்போது கையளிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை காலம் முடிவடைவதற்கு முன் தேயிலை தொழிற்சாலைகளை மீண்டும் தேயிலை சக்தி நிதியத்திற்கு கையளிக்கப்பட்ட போதும், உடன்படிக்கையின் பிரகாரம் மீள் செலுத்தப்பட்ட வைப்பு பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | தெனியாய தேயிலை தொழிற்சாலை வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கும் போது வாடகைக்கு பெற்றவரால் வைப்புச் செய்யப்பட்ட மீள செலுத்த வேண்டிய 06 மாத வாடகை பணமான ரூபா 2,850,000 தொகை 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்படாமல் நடைமுறை கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உரிய 2016.12.05 ஆம் திகதி பணம் தொழிற்சாலை வாடகைக்கு பெற்றவர் கிறீன் லைன்ஸ் கம்பனியால் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் போது நிலையான வைப்பு ஒன்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | நிதிச் சொத்துக்களை ஆகக் கூடிய நலன்கள் கிடைக்கும் வகையில் சரியாக முதலீடு செய்தல் வேண்டும். |